DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.343/2021**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | | : |
| த/பெ | : நடேசன் | மதம் | : |
| கிராமம் | : திருமுல்லைவாயில் | தொழில் | : ஓய்வு |
| வட்டம் | : சென்னை | வயது | : 74/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 23.02.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: Pw1**

எனது முந்தைய குறுக்கு விசாரணையில் Co–operative society ல் பணிபுரிந்து ஓய்வு பெற்றதாக தெரிவித்திருந்தேன் எந்த ஆண்டு ஓய்வு பெற்றேன் என்றால் 2010 ஆம் ஆண்டு. நான் வட்டிக்கு பணம் கொடுத்து உதவி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, யாருக்கும் வட்டிக்கு பணம் கொடுப்பதில்லை, கடனாகவும் பணம் தருவதில்லை. எதிரியிடம் இருந்து ரூ.17,50,000/– த்திற்கு காசோலை மே மாதம் 2021 ஆம் ஆண்டு பெரும்போது நான் மட்டும் இருந்தேனா அல்லது உடன் யாராவது இருந்தார்களா என்றால் நான் மட்டும் தான் வாங்கினேன், என் வீட்டிற்கு வந்து எதிரி கொடுத்தார். என் வீட்டில் என் மனைவி பத்மாவதி என்னுடன் இருந்தார் வேறு யாரும் இல்லை. காசோலை திருப்பப்பட்ட விவரத்தை எதிரிக்கு தெரிவித்தேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் தெரிவித்தேன். தனிப்பட்ட முறையில் காசோலை திருப்பப்பட்ட குறித்து எதிரிக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என் வீட்டார்களுக்கு சார்பாக நான் தான் முதலீடு செய்தேன் என்றால் சரிதான். முதலீடுக்கான Returns தரும்போது நான் தான் அதை பெறவேண்டும் என்றால் சரிதான். வாடகைக்கு விட்ட அலுவலகத்தை மாதம் தோறும்

வாடகை நேரில் சென்று நான் வாங்கி வந்தேன் என்றால் நேரில் சென்று வாங்குவேன், GPAY மூலமாகவும் எதிரி அனுப்புவார். வாடகை கேட்டு நான் செல்லும் போது எதிரி தான் வாடகை GPAY மூலம் அனுப்புவார். எதிரியின் அலுவலகத்தில் யாரெல்லாம் வேலை பார்ப்பார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அலுவலகத்தில் 2 Receptionist இருப்பார்கள் அவர்களிடம் கேட்பேன் எதிரி அழைத்தால் உள்ளே சென்று வாடகை கேட்பேன். Receptionist ல் ஒருவர் பெயர் திவ்யா என்றால் எனக்கு தெரியாது. நான் எனது குறுக்கு விசாரணையில் வாங்கியதாக சொல்லப்படும் வட்டித்தொகை நான் வாங்கினேனா அல்லது என் வீட்டார்கள் வாங்கி வந்தார்களா என்றால் நான் தான் வாங்கினேன். எனக்கு தெரியாமல் என் மனைவியோ மகனோ வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு திருப்பி கொடுத்த வட்டித்தொகை குறித்து கணக்கிட்டு பார்த்தேனா என்றால் அது வட்டி தொகை என்பதால் கணக்கிடவில்லை. எதிரி அலுவலகத்தை காலி செய்தது 2021 இறுதி மாதம் என்றால் இருக்கலாம். வீடை காலி செய்த நான் உதவினேனா என்றால் இல்லை, வீட்டை காலி செய்து சாவி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அலுவலகம் எனது அலுவலகம் என்றால் சரிதான்., அந்த புகைப்படம் (எ.ம.சா.ஆ.2) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படத்தில் திவ்யா யார் என்றால் Left side 2nd person. அந்த புகைப்படத்தில் இடது பக்கத்தில் மஞ்சள் நிற ஆடை அணிந்திருப்பவர் என் மகள் ஆவார். என் மகள் 2வது திருமணம் அவர் விருப்பத்துடன் செய்துகொண்டார் எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. அந்த புகைப்படத்தில் எதிரி என் மகளுக்கு பணம் கொடுக்கிறார் என்றால் அது குறித்து தெரியாது, எனக்கு தரவில்லை. எதிரி எனக்கு தரவேண்டிய Returns முழுவதும் செலுத்திவிட்டார் என்றும், எதிரியின் வியாபாரத்தில்

நஷ்டம் ஏற்பட்டதால் வட்டித்தொகை மட்டும் தர இயலவில்லைஎன்றும், என் மகளிடம் எனக்கு தரவேண்டிய முழுத்தொகையும் எதிரி கொடுத்துவிட்டார் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K